தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au

பேச்சுப் போட்டி 09-06-2018 ஆண்டு:- 1

எல்லோருக்கும் வணக்கம்!

**ஒழுக்கம்**

**"ஒழுக்கம் விருப்பம் தரலால்**

**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்."**

நல்ல ஒழுக்கம் என்பது பெற்றோர், ஆசிரியர் சொற்கேட்டு நடத்தல், மூத்தோரை மதித்தல், இனிமையாக பேசுதல் போன்றன ஆகும். இவற்றை பேணி நடந்தால் நாம் தவறான பாதையில் செல்ல மாட்டோம். ஒருவர் எவ்வளவுதான் படித்திருந்தாலும், எவ்வகைய செல்வங்களைப் பெற்றிருந்த போதிலும், ஒழுக்கம் குன்றின் அவரால் மதிப்புடன் தலை நிமிர்ந்து வாழமுடியாது. எனவே மாணவர்களாகிய நாங்கள் இச்சிறு வயதிலிருந்தே ஒழுக்கத்தை கடைப்பிடித்து வாழ பழகிக் கொள்ள வேண்டும்.

நன்றி, வணக்கம்.